**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**Present: R.Saranya, B.A.,LLB.,(Hons), LLM.,**
Judicial Magistrate,Gudiyattam.

**On Thursday, this 04th day of June 2026**

**Calendar Case (C.C) No.145/2021**
**(CNR.No.TNVL11-001193-2021)**
**in**
**Crime No. 179/2013**

| *Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019* | | |
|---|---|---|
| **1** | Serial Number | **CC No. 145 of 2021** |
| **2** | Name of the Police Station and Crime Number of the Offence | **State Represented by Paradarami Police Station, Cr.No.179/2013, U/s. 25(1B)(a) Arms Act. ….. Complainant** |
| **3** | Name | **Subramani, age-53, S/o. Selvaraji. Gandhi Kanaval Village, Ramalai Post, Gudiyatham Taluk. ….. Accused** |
| **4** | Father's Name | |
| **5** | Occupation | |
| **6** | Residence | |
| **7** | Age | |
| **8** | Occurrence | 06.08.2013 |
| **9** | Date of Filing of Final Report | 21.04.2021 |
| **10** | Date of Apprehension or appearance | 06.08.2013 |
| **11** | Release on bail | 03.09.2013 |
| **12** | Commitment | Not applicable |
| **13** | Details of Criminal Miscellaneous Petitions (CMP's) | -- |

| | | | |
|---|---|---|---|
| **14** | **Date of Chief examination of witnesses** | | **Cross examination** |
| | PW1 | 06.02.2025 | 06.02.2025 |
| | PW2 | 12.06.2025 | --- |
| | PW3 | 14.07.2025 | --- |
| | PW4 | 29.07.2025 | 29.07.2025 |
| | PW5 | 11.08.2025 | 11.08.2025 |
| | PW6 | 11.09.2025 | 11.09.2025 |
| | PW7 | 29.05.2026 | 29.05.2026 |
| **15** | Date of 1st questioning of the accused | | 11.08.2021 |
| **16** | Date of examination of the accused u/s.313 of CrPC | | 01.06.2026 |
| **17** | Sentence or order | | Accused is acquitted of the charge under Section 25(1B)(a) Arms Act and the judgment is recorded under Section 248(1) CrPC. |
| **18** | Service of copy of Judgment or Finding on Accused | | No Copy of Judgment Uploaded in CIS. |
| **19** | Explanation of delay | | Prosecution failed to produce witness promptly. |
| **20** | Property Order | | அரசு தரப்பில் வழக்கு சொத்தாக சி.பி.எண்.198/2020ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள நாட்டுத்துப்பாக்கி (அதில் இரும்பு குழாய் 106 செ.மீ நீளமுள்ளது, மரக்கட்டை சுமார் 83 செ.மீ நீளமுள்ளது. டிகர்கார்டு சுமார் 8 செ.மீ. டிகர் கார்டு இரும்பாலும் |

| | | |
|---|---|---|
| | | டிகர் கார்டு பகுதி பித்தளையாலும் இணைந்தும், இரும்பு குழாய்க்கு கீழ்புறத்தில் சுமார் 104 செ.மீ நீளமுள்ள வெடி மருந்து நிறப்ப பயன்படுத்தப்படும் இரும்பு கம்பி உள்ளது) மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ஆயுதப்படை கிடங்கிற்கு ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதி கொடுத்த பிணையானை அரசு தரப்பில் மேல்முறையீடு இருப்பின், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யப்பட உத்தரவிடப்படுகிறது. |

*Paragraphs in the judgment assigned continuous paragraph numbers in due obedience of the direction of the Hon'ble Supreme Court of India in BS Hari Commandant vs Union of India and Other (2023 LiveLaw SC 303).*

இவ்வழக்கு 13.05.2021 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை எண்.2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.மோகனராஜ௰., அவர்கள் முன்னிலையாகியும் இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து இறுதியாக 04.06.2026 ஆம் தேதி என் முன்பாக விசாரணைக்கு வந்ததில், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>தீர்ப்புரை</u>

1. அரசுத் தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 06.08.2013ம் தேதி காலை சுமார் 5 மணிக்கு கீ.வி குப்பம் காவல் வட்ட ஆய்வாளர் மதுவிலக்கு சம்பந்தமாக கண்காணித்துக்கொண்டு போகும் போது எதிரி சுப்பிரமணி த/பெ. செல்வராஜ் காந்தி கணவாய் கிராமம் என்பவர் எவ்வித அரசு உரிமம் அனுமதியும் இன்றி SBML நாட்டு துப்பாக்கியை கள்ளத்தனமாக

வைத்திருந்தார். எனவே எதிரி மீது 25(1-B)(a) Arms Act பிரிவின் கீழ் பரதராமி காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற பத்திரிக்கையை பரிசீலனை செய்து கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு எண் வழங்கப்பட்டு எதிரிக்கு குவிமுச 204 இன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான உடன் எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 207–ன் கீழ் இந்நீதிமன்றத்தில் இலவசமாக வழங்கப்பட்டது.

4. இவ்வழக்கின் இறுதி அறிக்கையும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரி குற்றம் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு ஆதாரம் இருக்கிறது என்றும், எதிரி மீது 25 (1-B)(a) Arms Act பிரிவின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டது. குற்றச்சாட்டை எதிரிக்கு படித்து காட்டி விளக்கிய போது எதிரி தான் குற்றத்தை செய்யவில்லை என்றும், பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்றும் மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறினார். எனவே அதை தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலானோர் விசாரணை செய்யப்பட்டும், மேற்படி சாட்சிகளின் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. அரசு தரப்பில் வழக்கு சொத்தாக சி.பி.எண்.198/2020ல் நாட்டுதுப்பாக்கியின் புகைப்படம் சா.பொ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:–</u>

அ.சா.1 அண்ணாதுரை அவரது சாட்சியத்தில் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், கடந்த 2013ம் வருடம் பரதராமி

காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்தபோது 06.08.2013ம் தேதி அதிகாலை 05.00 மணிக்கு குடியாத்தம் உட்கோட்டம் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் கே.வி குப்பம் காவல் நிலைய ஆய்வாளர் திரு.சம்பத் அவர்களுடன் நானும், என்னுடன் பணிபுரிந்து வரும் உதவி ஆய்வாளர் ரகுபதி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் நடராஜன் ஆகியோர் சகிதம் இரவு ரோந்து மற்றும் கள்ள நாட்டு துப்பாக்கி சம்பந்தமாக கண்காணித்து கொண்டு ராமாலையில் இருந்த காந்தி கணவாய் செல்லும் வழியில் முருகர் கோவில் ஓடையிடம் கண்காணித்து வரும்போது ஆஜர் எதிரி சுப்பிரமணி கையில் நாட்டு துப்பாக்கியுடன் நடந்து சென்று கொண்டிருந்தவர் போலிசார் ஆகிய எங்களை கண்டதும் தப்பி ஓட முயற்சி செய்தவரை காவல் ஆய்வாளர் அவர்கள் கைது செய்வதற்கு உதவியாக அவர் இருந்ததாகவும், எதிரி வைத்திருந்த மேற்படி நாட்டு துப்பாக்கியை கள்ளதனமாக வைத்திருந்ததை எதிரி ஒப்புக்கொண்டதால் அதனை ஆய்வாளர் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும், அந்த மகசரில் அ.சா.1ம் அவருடன் இருந்த போலிசாரும் கையொப்பம் செய்ததாகவும், பின்னர் எதிரி மற்றும் துப்பாக்கியுடன் நிலையம் ஆஜராகி எதிரி மீது வழக்கு பதிவு செய்வதற்கு ஆய்வாளருக்கு உதவியாக இருந்ததாகவும், தற்போது அவரிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அவருடையது தான் என்றும், அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 என்றும், பின்னர் ஆய்வாளர் அவரை விசாரணை செய்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.2 பிரகாசனம் தனது சாட்சியத்தில் சுமார் 12 வருடத்திற்கு முன்பு காந்தி கணவாய் முருகன் கோவில் அருகில் அந்த வழியாக அவர் சென்றுக்கொண்டிருந்த போது போலீசார் முந்தைய தினம் நடந்த ஒரு விபத்து சம்மந்தமாக பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும்படி போலீசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரும், விநாயகம் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.3 விநாயகம் தனது சாட்சியத்தில் தேதி, மாதம் வருடம் ஞாபகமில்லை என்றும், சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்ததாகவும், பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அவருடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.4 மோதிலால் தனது சாட்சியத்தில் தற்போது திருப்பத்தூர் மாவட்ட குற்ற பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 22.09.2020 தேதி பரதராமி காவல் நிலைய குற்ற எண்.179/2013 வழக்கின் கைப்பற்றபட்ட வழக்கு சொத்துகளை குடியாத்தம் குற்றவியல் நீதிமன்றத்தின் CP No.198/2020 கண்ட வழக்கு சொத்தை ரசாயன பரிசோதனை செய்யவேண்டி சென்னை தடய அறிவியல் ஆய்வு கூடத்திற்கு குடியாத்தம் நீதித்துறை நடுவர் அவர்களின் Dis.No.902/2020 11.09.2020 தேதியிட்ட தபாலை பெற்று வழக்கு சொத்தை சென்னைக்கு எடுத்து சென்று Ballistic பிரிவில் ஒப்புவித்து உரிய ஒப்புகையுடன் நிலையம் வந்து அறிக்கை செய்து கொண்டதாகவும், போலிசார் அவரை விசாரணை செய்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

10. அ.சா.5 ஜெகதீசன் தனது சாட்சியத்தில் தற்போது ஆரணி நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 2021 பரதராமி காவல் நிலையத்தல் முதல் நிலை காவலராக பணிபுரிந்தபோது குற்ற எண்.179/13 என்ற வழக்கு சம்பந்தமாக வழக்கு சொத்தை 18.02.2021ல் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் இருந்து பெற்று வந்து குடியாத்தம் குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாகவும், போலிசார் அவரை விசாரணை செய்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.6 திருநாவுக்கரசு தனது சாட்சியத்தில் சென்னை தடய அறிவியில் துறையில் கூடுதல் இயக்குனராக பணியாற்றி கடந்த 31.05.2023 அன்று பணி ஓய்வு பெற்றுவிட்டதாகவும், 22.09.2020 அன்று சென்னை தடய அறிவியல் துறையில் துப்பாக்கி ஆய்வு பிரிவில் துணை இயக்குனராக பணியில் இருந்தபோது பரதராமி காவல் நிலைய குற்ற எண்.179/2013 வழக்கில் சம்பந்தபட்ட ஒரு SBML துப்பாக்கியை தலைமை காவலர் எண்.643 திரு.மோதிலால் என்பவர் மூலமாக இந்நீதிமன்ற கடிதத்துடன் ஆய்வுக்காக பெற்றப்பட்டது என்றும், மேற்கண்ட துப்பாக்கியை ஆய்வு செய்து பின்வரும் கருத்துரைகளை வழங்கியுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தடய அறிவியல் அறிக்கை அவர் வழங்கியதுதான் என்றும், அந்த அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், வழக்கு சம்பந்தமாக போலிசார் அவரை விசாரணை செய்தார்கள் என்றும், இது ஒரு புரியற்ற குழல் உடைய முன் வழி நிரப்பும் ஒற்றை குழல் நாட்டு துப்பாக்கி என்றும், ஆயுத சட்டம் 1959ன் படி இது ஒரு சுடும் படைகலன் என்றும், துப்பாக்கியின் குழலினுல் கரி மருந்து எரிந்ததின் எரிவினை பொருட்கள் கண்டறியப்பட்டது என்றும், இது ஆய்விற்கு முன் துப்பாக்கி சுட உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதன் அறிகுறியாகும் என்றும், சோதனைக்காக சுட்டு பார்த்ததில் இந்த துப்பாக்கி இயங்கும் நிலையில் இருந்தது என்றும், இது ஒரு கொடிய சுடுபடை கலன் என்றும், இதற்கான ஆய்வறிக்கை T.No.5650/2020 BALL 126/2020என்ற எண்ணிட்டு 11.01.2021 தேதியிட்டு இந்நீதிமன்றத்திற்கு பரதராமி காவல் நிலைய முதல் நிலைய காவலர் எண்.3020 திரு.ஜெகதீஷ் என்பவர் மூலமாக அனுப்பட்டுள்ளது என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.7 முரளிதரன் தனது சாட்சியத்தில் தற்போது ஆற்காடு கிராமிய காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 06.08.2013 அன்று பணியில் இருந்த சம்பத் காவல் ஆய்வாளர், கே.வி.குப்பம் காவல் வட்டம் என்பவர் 06.08.2013 அன்று காலை

05.00 மணிக்கு குடியாத்தம் உட்கோட்ட காவல் துணைகண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில் உதவி ஆய்வளார் ரகுபதி, சிறப்பு உதவி ஆய்வாளர் நடராஜன், சிறப்பு உதவி ஆய்வாளர் அண்ணாதுரை ஆகியோர் சகிதமாக அன்னிய சந்தேக நபர்களை பற்றி கள்ள நாட்டு துப்பாக்கி சம்பந்தமாகவும் கண்காணித்துகொண்டு சென்றபோது ராமாலை காந்தி கணவாய் கிராமம், முருகன் கோவில் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த எதிரி சுப்பிரமணி கையில் நாட்டுதுப்பாக்கியுடன் இருந்தவரை விசாரிக்க அதற்கு அரசு அனுமதி இல்லை என்று கூறியவரை உரிமம் இல்லாமல் கள்ள நாட்டுதுப்பாக்கி வைத்துகொண்டு இருந்ததற்காக காரணம் கூறி கைது செய்து சம்பவ இடத்தில் தனிநபர் சாட்சிகள்யாரும் இல்லாததால் சிறப்பு உதவி ஆய்வாளர் நடராஜன் மற்றும் அண்ணாதுரை ஆகியோர் முன்னிலையில் காலை 05.30 மணிக்கு மகசர் தயார் செய்து சுமார் 152 செ.மீ நீளமுள்ள நாட்டுதுப்பாக்கி ஒன்று, அதில் இரும்பு குழாய் 106 செ.மீ நீளமுள்ளது என்றும், மரக்கட்டை சுமார் 58 செ.மீ நீளமுள்ளது. Triger guard சுமார் 80 செ.மீ நீளமுள்ளது என்றும், Triger guard இரும்பாலும், பித்தளையாலும் இணைந்தும், இரும்பு குழாய்க்கு கீழ் புறத்தில் சுமார் 104 செ.மீ நீளமுள்ள வெடி மருந்து நிரப்ப பயன்படு்ததப்படும் இரும்பு கம்பி உள்ளது என்றும், இதை மகசராக கைப்பற்றியும், சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகள் பிரகாசம், மற்றும் விநாயகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்ததாகவும், பின்னர் சாட்சிகள் ரகுபதி, அண்ணாதுரை, நடராஜன், பிரகாசம், விநாயகம் ஆகியோரை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்துகொண்டோம். பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து பரதராமி காவல் நிலைய குற்ற எண். 179/2013, 25(1)(B)(a) Arms Act-ன் படி வழக்கு பதிவு செய்து எதிரியை திரேக பரிசோதனை செய்து, தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், மகசரில் கைப்பற்றிய கள்ள

நாட்டுதுப்பாக்கி படிவம்–95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்ததோம். பின்னர் நீதிமன்றத்தின் மூலம் கள்ள துப்பாக்கியை பரிசோதனைக்காக தடய அறிவியல் துறை, சென்னைக்கு அனுப்பி அவர்களது அறிக்கையை பெற்றதாகவும், பின்னர் தடய அறிவியல் அறிக்கையை வழங்கிய திரு.திருநாவுக்கரசு உதவி இயக்குநர், தடய அறிவியல் துறை என்பவரை விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், பின்னர் இந்த வழக்கினை 22.02.2021 அன்று புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு ஏற்கனவே இருந்த ஆய்வாளர் கூறியது போலவே சாட்சிகள் என்னிடமும் கூறியதால் நான் தனியாக எதுவும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், நாட்டு துப்பாக்கியை தடய அறிவியல் ஆய்வு கூடத்திற்கு நீதிமன்த்தின் மூலம் எடுத்து சென்ற காவலர் மோதிலால் மற்றும் ஜெகதீசன் ஆகியோரை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர் மாவட்ட ஆட்சியர்வேலூர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி sanction of prosecution order–ஐ பெற்று பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கையை 21.04.2021 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

13. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சிய பகுதிகளை குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் விளக்கி கூறி கேள்வி கேட்டதற்கு எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தெரிவித்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் எதிரி தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை மற்றும் எதிரி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டது.

14. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், எதிரி மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் எந்த ஒரு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு:**

15. கடந்த 06.08.2013ம் தேதி காலை சுமார் 5 மணியளவில் காந்தி கணவாய் முருகன் கோவில் ஓடை அருகே மதுவிலக்கு வழக்குகள் சம்பந்தமாக கண்காணித்துக்கொண்டிருந்த போது எதிரி சுப்பிரமணி என்பவர் எவ்வித அரசு உரிமமுமின்றி SBML நாட்டு துப்பாக்கியை கள்ளத்தனமாக வைத்திருந்ததாக அரசு தரப்பில் எதிரியின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. இவ்வழக்கில் அ.சா.1 அண்ணாதுரை பரதராமி காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆவார். இவர் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி ஆவார். அ.சா.2 மற்றும் அ.சா.3 பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபட சாட்சி ஆவார்கள். அ.சா.4 கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான நாட்டு துப்பாக்கியை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்புவித்த சாட்சி மற்றும் அ.சா.5 ஆய்வகத்தில் இருந்து வழக்கு சொத்தை எடுத்து வந்தது குறித்த சாட்சி ஆவார். அ.சா.6 தடய அறிவியல் ஆய்வாளர், அ.சா.7 புலன் விசாரணை அதிகாரி ஆவார்.

17. அ.சா.1 அவரது முதல் விசாரணையில் கடந்த 06.08.2013ம் தேதி காலை சுமார் 5 மணியளவில் காந்தி கணவாய் முருகன் கோவில் ஓடை அருகே மதுவிலக்கு வழக்குகள் சம்பந்தமாக கண்காணித்துக்கொண்டிருந்த போது கையில் துப்பாக்கியுடன் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர் அவர்களை கண்டதும் தப்பி ஓட முயற்சி செய்தவரை பிடித்து விசாரிக்கையில் அவருடைய பெயர் சுப்பிரமணி என்றும், மேற்படி நாட்டு துப்பாக்கியை கள்ளத்தனமாக வைத்திருந்ததை எதிரி ஒப்புக்கொண்டதாகவும், அதனை ஆய்வாளர் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும், அதில் கையொப்பம் செய்ததாகவும், சொல்லி உள்ளார். மேற்கண்ட விவரங்களையே அவருடைய முதல் விசாரணையிலும் சாட்சியம் அளித்துள்ளார்.

18. அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்ட பிரகாசம் மற்றும் விநாயகம் பார்வை மகசர் சாட்சிகள் அரசு தரப்பிற்கு எதிராக மாறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். எனவே அவர்களின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய உதவிகரமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. இவ்வழக்கில் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்ட மோதிலால் மற்றும் ஜெகதீசன் ஆகியோர் வழக்கு சொத்தான நாட்டு துப்பாக்கியை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்புவித்தது குறித்தும் திரும்ப பெற்று வந்தது குறித்தும் மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே அ.சா.4 மற்றும் அ.சா.5 சாட்சியத்தில் இருந்து எதிரி நாட்டு துப்பாக்கியை வைத்திருந்தார் என்பது நிருபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. அ.சா.6 தடய அறிவியல் ஆய்வகத்தின் கூடுதல் இயக்குநர் துப்பாக்கியை தடய அறிவியல் ஆய்வகத்தில் உட்படுத்தியது குறித்தும், அறிக்கை அளித்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் போலீசார் அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்று சரியாக ஞாபகமில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

21. அ.சா.7 காவல் ஆய்வாளர் முரளிதரன் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி புகார் மனுவை பெற்றது குறித்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும், வழக்கு சொத்தை கைப்பற்றியது குறித்தும், விசாரணையை முடித்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்ததை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அவரது குறுக்கு விசாரணையில் வழக்கு சொத்தான நாட்டு துப்பாக்கி மற்றும் படிவம்–91 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்பு 7 ஆண்டுகள் கழித்து தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று அவரே ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் அவ்வாறு 7 ஆண்டுகள் காலதாமதாக

வழக்கு சொத்தை இரசாயன பரிசோதனைக்கு அனுப்பியதற்கான காரணம் எதுவும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

22. அரசு தரப்பு சாட்சிகளை பரிசீலனை செய்கையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காந்தி கணவாய் முருகன் கோவில் ஓடை என்பது பொதுவான இடமாக இருக்கும் பட்சத்தில் எந்தவொரு தனிநபர் சாட்சியையும், அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படாதது குறித்து அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கை 2013 வருடத்தில் பதிவு செய்த பின்பும் 7 ஆண்டுகள் காலதாமதமாக படிவம்–95 மற்றும் வழக்கு சொத்து நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது குறித்து அரசு தரப்பில் வழக்கின் புலன் விசாரணை அதிகாரி எந்த முறையான காரணமும் குறிப்பிட்டு சொல்லவில்லை. எனவே உண்மையில் வழக்கு சொத்து எதிரியிடம் இருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையில் 3வது காலத்தில் காலை 6 மணிக்கு கண்காணிப்பு பணிக்கு சென்றதாக குறிப்பிட்டுவிட்டு கைப்பற்றுதல் மகசரில் வழக்கு சொத்து காலை 5.30 மணிக்கு கைப்பற்றப்பட்டதாக முன்னுக்குபின் முரணாக குறிப்பிடப்பட்டுள்ளது.

23. எதிரி தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தின் போது வழக்கு சொத்து நீதிமன்றத்தில் 7 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்துள்ளதால் வழக்கு சொத்து எதிரியிடம் இருந்து கைப்பற்றவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று வாதிட்டார்.

24. எனவே சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்களை கொண்டு சரிவர விசாரணை செய்யாமல் எதிரியின் மீது இறுதி அறிக்கையை தாக்கல் செய்ததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்நிலையில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையான சாட்சியங்கள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையான சாண்றாவனங்களில் இருந்து எதிரி மீதான 25(1-B)(a) Arms Act பிரிவின் கீழான குற்றசாட்டுகள் அரசு

தரப்பில் தகுதி நிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25. இறுதியாக சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, 25(1-B)(a) Arms Act பிரிவின் கீழான குற்றசாட்டுகளின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதி கொடுத்த பிணையாணை அரசு தரப்பில் மேல்முறையீடு இருப்பின், மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யப்பட உத்தரவிடப்படுகிறது.

26. இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்கு சொத்தாக சி.பி.எண்.198/2020ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள நாட்டுத்துப்பாக்கியை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ஆயுதப்படை கிடங்கிற்கு ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க சுருக்கெழுத்து தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 04ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/—இரா.சரண்யா,
நீதித்துறை நடுவர்,
குடியாத்தம்.

**<u>இணைப்புகள் :—</u>**
**<u>1. அரசுத் தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | அண்ணாதுரை. |
| அ.சா.2 | பிரகாசம். |
| அ.சா.3 | விநாயகம். |
| அ.சா.4 | மோதிலால். |
| அ.சா.5 | ஜெகதீசன். |
| அ.சா.6 | திருநாவுக்கரசு. |
| அ.சா.7 | முரளிதரன். |

**2. அரசுத் தரப்பு சான்றாவணங்கள்**

அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம்.

அ.சா.ஆ.2 பார்வை மகசரில் உள்ள அ.சா.2ன் கையொப்பம்.

அ.சா.ஆ.3 பார்வை மகசரில் உள்ள அ.சா.3ன் கையொப்பம்.

அ.சா.ஆ.4 தடய அறிவியல் ஆய்வு அறிக்கை.

அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை.

அ.சா.ஆ.6 பார்வை மகசர்.

அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம்.

அ.சா.ஆ.8 கைப்பற்றுதல் மகசர்.

அ.சா.ஆ.9 படிவம்–91

அ.சா.ஆ.10 மாவட்ட ஆட்சியரின் Sanction of Prosecution Order

**3. அரசுத்தரப்பு சான்றுபொருள்:** – சா.பொ.1- நாட்டு துப்பாக்கியின் புகைப்படம்.

**4. எதிரி தரப்பில் சான்றாவணங்கள்: – இல்லை**

**குறிப்பு**

1) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2) வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.
3) சாட்சிகள் எவரும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்**

மாண்புமிகு, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், வேலூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

//உண்மை நகல்//

R SARANYA

Digitally signed by R SARANYA

நீதித்துறை நடுவர்,
குடியாத்தம்.